ஏப்ரல் 19, 2023

# நடமாடும் வாகன வியாபார உரிமங்கள் புதுப்பித்தல் மற்றும் உரிமங்கள் பெறுவது இப்போது ஆன்லைனிலேயெ செய்துகொள்ளலாம்

ப்ராம்ப்ட்டன், ON – நடமாடும் வியாபார வாகன ஓட்டுனர்கள் மற்றும் அவற்றை நடத்துபவர்கள் தங்கள் உரிமங்களைப் புதுப்பிக்கவும் வாகன எண் தகடுகளைப் பெறவும் ஆன்லைனிலேயெ இப்போது விண்ணப்பிக்கலாம்.

ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1500 ஓட்டுனர்/வியாபாரம் நடத்துபவருக்கான உரிமங்களை வழங்குகிறது அல்லது புதுப்பிக்கிறது மற்றும் சுமார் 1200 வாகனங்களுக்கு வாகன எண் தகடுகளை வழங்குகிறது அல்லது புதுப்பிக்கிறது.

ப்ராம்ப்ட்டன் நகர எல்லைக்குள்ளாக பின்வரும் நடமாடும் வாகன வியாபாரங்கள் செயல்படுவதற்கு தற்போது ஒரு உரிமம் பெறுவதும் வாகன எண் தகடு பெறுவதும் அவசியமாகிறது:

- லிமோஸீன் வாகனம்
- இழுவை ட்ரக்குகள்
- ஓட்டுனர் பயிற்சிப் பள்ளி வாகனங்கள்
- வாடகைக் கார்
- சிற்றுண்டி விற்பனை வாகனங்கள்

ஒரு உரிமத்தினை வழங்குவதற்கு முன்னதாக, 'நகரின் நடமாடும் வாகன உரிமம் பெறுதல்' உப சட்டத்தின் கீழாக உரிமம் வழங்குவதற்காக, அதற்கான தகுதிகளை அந்த வாகனங்கள் மற்றும் ஓட்டுனர்கள் கொண்டிருப்பதை அமலாக்கக் குழுவானது உறுதி செய்கிறது. இவற்றில் மோட்டார் வாகனப் பாதுகாப்பிற்கான ஆய்வுசோதனைகள், குற்றவியல்/MTO சோதனைகள் மற்றும் காப்பீடு செய்திருப்பது ஆகியவை அடங்கும்.

'நகரின் நடமாடும் வாகன உரிமம் பெறுதல்' உப சட்டம் 67-2014 க்கு இணக்கமாக இருப்பதை உறுதி செய்வதற்காகவே, நடமாடும் வாகன ஓட்டுனர்/வியாபாரம் நடத்துபவர் உரிமங்கள் மற்றும் வாகன எண் தகடுகள் வழங்கப்படுகின்றன.

உரிமங்கள் மற்றும் வாகன எண் தகடுகள் பெறுதல் மற்றும் புதுப்பித்தல்களுக்கான கோரிக்கைகள் இப்போது ஆன்லைன் விண்ணப்ப செயல்முறை மூலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. கணினி அணுகல் இல்லாதவர்களுக்காக, ஃப்ளவர் சிட்டி (Flower City ) சமூக வளாகத்தில் 8850 மெக்லாலின் ரோடு தெற்கு

(McLaughlin Road South), அலகு எண்  2, ப்ராம்ப்ட்டன் ON L6Y 5T1 உள்ள கியோஸ்க்குகளில் ஆன்லைன் வசதி செய்து தரப்படுகிறது.

ஒரு உரிமத்திற்காக ஆன்லைனில் விண்ணப்பிக்கவோ அல்லது அதனைப் புதுப்பிக்கவோ வருகை தரவும்: eForm (brampton.ca)

வாகன எண் தகடுக்காக ஆன்லைனில் விண்ணப்பிக்கவோ அல்லது அதனைப் புதுப்பிக்கவோ வருகை தரவும்: eForm (brampton.ca)

.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca